

சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனிடம், ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் நடைபெற உள்ள இந்திய விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் கலை நிகழ்ச்சிகள் வழங்க செல்லும் 20 கலைஞர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், துறை செயலாளர் வே.ராஜாராமன், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி கவிதா ராமு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்திருக்கிற 'ஓரணியில் தமிழ்நாடு' திட்டத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (3.7.2025) கிண்டி லேபர் காலனியில் 214வது பாகத்தில் வீடு, வீடாகச் சென்று விளக்கினார். இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மாஸ்கோவில் நடைபெறவுள்ள கலை நிகழ்ச்சியில் 20 கலைஞர்கள் பங்கேற்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வாழ்த்து!

சென்னை, ஜுலை 4 -

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறையின் கீழ் கலைக்கல்வி அளிக்கும் நோக்கில் இசைக்கல்லூரிகள், கவின் கலைக்கல்லூரிகள், சிற்பக்கல்லூரி, மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், அரசின் பகுதி நேர கலை பயிற்சி மையங்கள், ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. இத்துறையின் சார்பில் நிகழ்த்து கலை மற்றும் கவின் கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சி நடத்துவதற்கும், கண்காட்சிகள் போன்றவை நடத்துவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

கலை பண்பாட்டுத் துறை, செவ்வியல் மற்றும் கிராமியக்கலைகளைத் தொழிலாகக் கொண்டுள்ள கலைஞர்களுக்கு மாவட்ட, மாநில, வெளிமாநில நிகழ்ச்சிகள் வழங்குவதோடு அயல் நாடுகளில் கலை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்தியாவிற்கு வெளியிலும் கலை நிகழ்ச்சி வாய்ப்புகள் வழங்கி கலையினை வளர்த்து வருகிறது. இவ்வகையில் ரஷ்யா நாட்டின் இந்திய தூதரகம் மாஸ்கோவில் நடைபெறும் மாபெரும் இந்திய கோடை விழாவினை ஜுலை 05 முதல் 13 வரை நடத்துகிறது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலக்கலைஞர்கள் கலந்துக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் வழங்க உள்ளனர்.

தமிழ்நாட்டின் சார்பில் ஜுலை 5 அன்று தொடக்க விழாவிலும் ஜுலை 6 அன்றும் தமிழிசை, பரதநாட்டியம், தெருக்கூத்து மற்றும் தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சிகளை 20 கலைஞர்கள் நடத்துகின்றனர். திருபுவனம் ஆத்மநாதன் குழுவினர் தமிழிசை நிகழ்ச்சியும், சென்னை சாய்கிருபா குழுவினர் பரதநாட்டிய நிகழ்ச்சியும், காஞ்சிபுரம், திருவள்ளுர், இராணிபேட்டை மற்றும் சேலம் பகுதிகளை சேர்ந்த தெருக்கூத்து கலைஞர்கள், கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையினை சேர்ந்த கலைமாமணி முத்துசந்திரன் குழுவினர் தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சி நடத்துகின்றனர். கலை பண்பாட்டுத்துறையின் தஞ்சாவூர் மண்டல உதவி இயக்குநர் செந்தில் குமார் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக உடன் செல்கிறார்.

ரஷ்யா செல்லும் கலைக் குழுவினர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி கவிதா ராமு கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் செல்வி சி.கீதா ஆகியோர் உடனிருந்தனர்.

### 'குடிநீர் மணி' திட்டம்!

# தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் வரவேற்பு!

## மாநில தலைவர் ஆ.மலைக்கொழுந்தன் அறிக்கை!

சென்னை, ஜுலை 4 -

'குடிநீர்மணி' திட்டத்திற்கு தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் வரவேற்றுள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் மாநில தலைவர் ஆ.மலைக்கொழுந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாணவர்களின் உடல்நலனில் அக்கறையோடு அறிமுகப்படுத்தியுள்ள 'குடிநீர் மணி' என்ற திட்டத்தைத் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் வரவேற்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து வகை தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் தினந்தோறும் பள்ளி நேரத்தில் மாணவர்கள் தண்ணீர் அருந்துவதற்காக ஒரு நாளைக்கு காலை 11 மணிக்கு மதியம் 1 மணிக்கு பிற்பகல் 3 மணிக்கு குடிநீர் மணி அடிக்கப்பட்டு மாணவர்கள் தண்ணீர் அருந்துவதற்காக மூன்று முதல் ஐந்து நிமிட இடைவெளி வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியின் வேலை நேர வசதிக்கேற்ப இந்த நேரத்தில் மாற்றம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.

பள்ளி நேரங்களில் மாணவர்கள் தண்ணீர் அருந்துவதால் மாணவர்களின் கவனக் குவிப்பு மற்றும் நினைவாற்றல் மேம்படுகிறது. உடல் ஆரோக்கியம் அதிகரிக்கிறது. தலைவலி மற்றும் சோர்வு தடுக்கப்படுகிறது.

அமைதியான மனநிலை மற்றும் நடத்தையை ஊக்குவிக்கிறது. ஆரோக்கியமான பழக்கங்கள் ஏற்பட வழிவகை செய்கிறது.

மாணவர்களிடம் ஏற்படும் நீர் இழப்பைத் தடுத்து மாணவர்களைச் சுறுசுறுப்பாக வைத்திருக்க இது மிகவும் அவசியமாக இருக்கிறது.

கிராமப்புற ஏழை ,எளிய அரசுப்பள்ளி மாணவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு மாணவர்களின் நலன் சார்ந்து இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய அளவில் பல திட்டங்களைப் பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் பாராட்டும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில்தற்பொழுது அரசு பள்ளிகளில் ,அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் 'குடிநீர் மணி' என்ற திட்டத்தை தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பெற்ற ஆசிரியர் சங்கம் வரவேற்கிறது.

இந்த திட்டத்தை அறிவித்த முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோருக்கு தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' திட்டத்தை விளக்கி - கிண்டியில்

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் வீடு, வீடாகச் சென்று பொதுமக்களிடம் தீவிர பிரச்சாரம்!

சென்னை, ஜுலை 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்திருக்கிற ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கிண்டி லேபர்காலனியில் 214வது பாகத்தில் வீடு, வீடாகச் சென்று விளக்கினார். இந்நிகழ்வின் இறுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்கிற மிகப்பெரிய முன்னெடுப்பை தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம் (ஜுலை 1) அண்ணா அறிவாலய வளாகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி அதற்கான காரணகாரியங்களை முதலமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். சென்னை நீங்கலாக, 33 வருவாய் மாவட்டங்களிலும் அதுபோன்று பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடத்தி, ஓரணியில் தமிழ்நாடு விளக்கம் தெளிவாக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை மாவட்டங்களிலும் ஓரணியில் தமிழ்நாடு விளக்கப் பொதுக்கூட்டங்கள் மிகப் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது. சென்னை தெற்கு மாவட்டத்தைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் துரைமுருகன் மற்றும் மூத்த ஊடகவியலாளர் செந்தில்வேல் ஆகியோர் பங்கேற்ற ஓரணியில் தமிழ்நாடு எனும் விளக்கக் கூட்டம் நேற்றைக்கு நடைபெற்றது.

அந்தவகையில் இன்று காலை தொடங்கி சென்னை தெற்கு மாவட்டத்தின் அனைத்து வாக்குச் சாவடிகளிலும், 1990 வாக்குச்சாவடிகள் இந்த மாவட்டத்தில் இருக்கிறது. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் உள்ள பொதுமக்களை வீடுகளுக்கே நேரிடியாகத் தேடிச் சென்று அவர்களிடையே பல்வேறு விளக்கங்களை எடுத்துச்சொல்லி, குறிப்பாக எந்த நெருக்கடியான சூழலிலும், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காப்பாற்றப்பட வேண்டுமென்று நினைக்கிறீர்களா? என்ற கேள்வி அவர்களிடத்தில் கேட்கப்பட்டு, அவர்களும் தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கப்பட வேண்டும் என்பது அவசியம் என்று பதிலளிக்கிறார்கள்.

மகளிர், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் உள்ளிட்ட எல்லாத்தரப்பினருக்குமான நலன்காக்கும் நலத்திட்டங்கள் தொடர்ந்து நமக்குக் கிடைக்கவேண்டுமல்லவா? என்ற கேள்விக் கேட்கிறபோது, ஆமாம் அனைவரின் நலன்காக்கும் நலத்திட்டங்கள் கண்டிப்பாக கிடைக்க வேண்டும் என்கின்ற பதிலையும் பொதுமக்கள் சொல்கிறார்கள்.

மாணவர்களுக்கான கல்வி நிதியாக இருந்தாலும், மாநிலங்களுக்கான நிதி பகிர்வாக இருந்தாலும், நியாயமற்ற தொகுதி மறுவரையறையாகவிருந்தாலும், கொடுமையான நீட் போன்ற நுழைவுத்தேர்வுகளாக இருந்தாலும், தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை பொதுமக்களிடத்தில் எடுத்துச்சொல்லப்படுகிறது. அதற்கு அவர்களும் ஆமாம் என்கிற வகையில் பதிலளிக்கிறார்கள்.

டெல்லிக்கு அடிபணியாமல் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் மட்டுமே முடியும் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? என்று கேட்கிறபோது, அதற்கும் பொதுமக்கள் ஆமாம் என்று பதில்சொல்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில்தான் கோடிக்கணக்கான குடும்பங்களையும், ஒரே அணியில் இணைக்கிற நோக்கோடு அவர்கள் அனைவருடைய கரங்களையும் ஒன்று சேர்க்கிற ஒரு மாபெரும் திட்டமாக ஓரணியில் தமிழ்நாடு என்கிற திட்டம் இன்றைக்குச் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வீடு அடங்கியிருக்கிற பாகத்தில் குறிப்பாக சித்தரஞ்சன் சாலையில் இன்று காலையில் ஓரணியில் தமிழ்நாடு என்கிற திட்டத்தை அவரே தொடங்கி வைத்தார். முதல்வர் அவர்களே வீடுகள் தோறும் வந்து இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் பிரதிநிதிகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்துத் தரப்பு நிர்வாகிகளும், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் பி.எல்ஏ., என்று சொல்லப்படுகிற பாக முகவர் ஒருவரும், பி.டி.ஏ. என்று சொல்லப்படுகிற பூத் லெவல் ஏஜென்ட் ஒருவரும், மகளிர் ஒருவரும், இளைஞரணியைச் சேர்ந்த ஒருவரும் ஆக நான்கு பேர் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தனித்தனியே வாக்காளர்களைச் சந்தித்து, அவர்களிடத்தில் இந்த விளக்கங்களைச் சொல்லி, அவர்களுடைய விருப்பத்தைப் பெற்று, அவர்களை இந்த ஓரணியில் இணைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இன்று காலை தொடங்கிய இந்த பணி என்பது இன்னமும் ஒன்றரை மாதம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கிறது. இன்றைக்கு நான் என்னுடைய வீடு, வாக்கு அடங்கியிருக்கிற லேபர் காலனி, தொழிலாளர் குடியிருப்பு 214வது பாகத்தில் வீடுகள் தோறும் ஓரணியில் தமிழ்நாடு என்கிற திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்களை சந்திக்கும் பணியினைத் தொடங்கியிருக்கிறேன்.

இந்த பணிக்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல பி.எல்.ஏ2, பீ.டி.ஏ., மகளிர், இளைஞர் என்கிற வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நியமிக்கப்பட்டவர்கள் இந்தப் பணியினைச் செய்கிறார்கள். ஏற்கெனவே தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது ஒன்றிணைவோம் வா என்கிற திட்டத்தை முன்னெடுத்து, அந்தத் திட்டம் மிகப்பெரிய அளவிலான வெற்றியைப் பெற்று, குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்திற்குப் பிறகு, பொதுமக்களை ஒன்றிணைத்த பணியாக அதை நடத்தி, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் உங்களிடையே இருக்கிற உத்தரவாதத்தை தந்ததன் விளைவு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது.

2026ஆம் ஆண்டில் நடைபெற இருக்கிற தேர்தலில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லிவருவதைப்போல வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்கிற வகையிலான ஒரு முழக்கத்தை முன்னெடுத்து, அந்த பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒருசிலர்கூட எப்படி சாத்தியம் என்றுகூட தங்களுடைய அய்யத்தை தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்பதற்கான காரணத்தை, பெரும்பாலோனோர் அறிவார்கள்.

2024இல் நடைபெற்று முடிந்த, நாடாளுமன்றத் தேர்தலில் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தாலும், சட்டமன்றத் தொகுதிகள் என்று எடுத்துக்கொண்டால் 234 இந்த தொகுதிகளில் தி.மு.க. கூடுதலான வாக்குகள் பெற்ற தொகுதிகள் என்று எடுத்துக்கொண்டால், 221 தொகுதிகள். ஒரு எட்டு இடங்களில் மட்டும்தான் அ.தி.மு.க. அதிகமான வாக்குகளைப் பெற்றது. தருமபுரி, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, மூன்று இடங்களில் பா.ம.க அதிகமான வாக்குகளைப் பெற்றது. அதேபோல் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, திரும ங்கலம் என்கிற இரண்டு இடங்களில் மட்டும்தான் தே.மு.தி.க. கூடுதல் வாக்குகளைப் பெற்றது. ஆக அவர்கள் 13 தொகுதிகளில் மட்டுமே கூடுதல் வாக்குகளை பெற்றார்கள். மீதமிருந்த 221 தொகுதிகளிலும் தி.மு.க.தான் கூடுதல் வாக்குகளைப் பெற்றது.

அதனால்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு என்கின்ற வகையிலான அந்தத் திட்டத்தை முன்னெடுத்து செய்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு மக்களிடம் தி.மு.க.வுக்கு இருக்கிற வரவேற்பு. நிச்சயம் ஏற்கெனவே அ.தி.மு.க.வுக்கு அந்த எட்டுத் தொகுதிகளில் இருக்கிற வாக்குகளையும் பா.ம.க., தே.மு.தி.க.வுக்கு கூடுதலான வாக்குகள் தந்த அந்த 5 தொகுதிகளிலும்கூட தி.மு.க. வெற்றிபெறும் சூழல் என்பது பிரகாசமாக இருந்து கொண்டிருக்கிறது. இதை முன்னெடுக்கத்தான் ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைக்கும் பணியினை தி.மு.கழகம் செய்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் தா. மோகன்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 134 வது நாள்!

## கொளத்தூர் 69, 69 அ வட்டத்தில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜுலை 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 134 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.7.2025) கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69 GKM காலனி, 18 ஆவது தெரு, ஜம்புலிங்கம் மெயின் ரோடு, 2) வட்டம் 69 அ,



பல்லார்டு தெரு, அகரம், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D. யோகப்பிரியா, என். தாவூத்பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு நிகழ்ச்சி நடைபெற்றது 114 (அ) வட்ட செயலாளர் அ.தமீம் அன்சாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சேப்பாக்கம் பகுதி கழக செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி 9 ஆவது மண்டல குழு தலைவருமான எஸ்.மதன்மோகன் பங்கேற்று வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து தி.மு.க., அரசின் 4 ஆண்டு கால சாதனைகளை எடுத்துக்கூறி உறுப்பினர் சேர்க்கையை தொடக்கி வைத்தார்

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ – கே.ஏழுமலை எம்.சி. தலைமை! தியாகராயர்நகர் கிழக்கு பகுதி

# அவைத் தலைவர் மு.மணிவண்ணன் (கோமதி மணிவண்ணன் எம்.சி.) 70 வது பிறந்தநாள் விழா!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ – நே.சிற்றரசு – அன்பகம் கலை – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜுலை. 04

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன் (131 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன்) 70 வது பிறந்த நாள் விழா இன்று (04.07.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, அசோக் நகர், 7 வது அவென்யூ, பிரியதர்ஷினி ஹாலில் நடைபெறுகிறது.

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயநகர் மேற்குப் பகுதிக் கழகச் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், 10 வது மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் க.தனசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, கோ.சு.மணி, மாம்பழம் ஆ.சந்திரசேகர், மு.சத்யா, எஸ்.மோகன், எம்.ஆறுமுகம், முரசொலி எம்.சிங்காரம் ஜெ.ஜானகிராமன், ராஜா அன்பழகன் எம்.சி, கார்த்திகா பாஸ்கர் எம்.சி, மோனிஷா கருணாநிதி, எம்.கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், எம்.எஸ். பழனி, மு.செல்வகுமார், லலிதாபுரம் என்.துரை, எஸ். லட்சுமிகாந்தன், டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந. மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, பி.ஜெயக்குமார், பி.மாரி, இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ்.ஜனார்த்தா, எஸ்.புஷ்பா, எஸ். மோகன்ராஜ், என். ராமகிருஷ்ணன், பாபா சுரேஷ், கா.சந்திரசேகரன், சாந்தி பங்காரு, எஸ்.பாஸ்கர் எம்.சி. மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

131 வது வட்டக் கழக செயலாளர் மு.ம.செந்தில்குமார், மு.ம.மதன்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் நகர திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் தேரடி வீதியில் இளைஞரணி அமைப்பாளர் முத்து முகமது புகாரி ஏற்பாட்டில் நடைபெற்றது. நகர செயலாளர் குமார் தலைமை தாங்கினார். புவன ராகவேந்திரர், ராஜசேகர், உதயகுமார்,கருணாநிதி, நவீன், தேவப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அண்டோ வரவேற்றார்இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் ரஜினி செந்தில் , பேரரசன் ஆகியோர் கலந்துகொண்டு நான்காண்டு சாதனைகளை விளக்கிப் பொதுமக்களிடையே பேசினர். நகர மன்ற தலைவர் மலர்விழி குமார், துணைத் தலைவர் சிவலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் பிரேம்சந்த், மாணவரணி துணை அமைப்பாளர் சரளா தனசேகரன், ஏராளமானோர் கலந்து கொண்டனர்